# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1799/9 - 2013 පෙබරවාරි මස 27 වැනි බදාදා - 2013.02.27

*1799/9 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திச் செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திச் செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மற்றும் நகர அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட காணிகளானது நிதி மற்றும் நிறுவன அபிவிருத்தி செயல்திட்டத்தின் அமுலாக்கலுக்கு உடனடியாக தேவைப்படுகின்றது என கருதுவதால், குறிப்பிட்ட காணி அப்படியான நோக்கத்திற்குத் தேவையென இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 1,*
*2013, பெப்புருவரி 26.*

***அட்டவணை***

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை பிரதேச செயலாளர் பிரிவு, கிராம சேவையாளர் பிரிவு இல. 514/B ராஜகிரிய, ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை மாநகர சபை எல்லைக்குள் அடங்கியுள்ளதும்; முன்னீட்டுச் சுவடி இல. CO/KTT/2008/400 இல் காணித்துண்டு இலக்கங்கள் "A" மற்றும் "B" என காட்டப்பட்டுள்ளதும், ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை, ராஜகிரியாவில் மதிப்பீட்டு இலக்கங்கள் 300 மற்றும் 294 இனைக்கொண்டுள்ள இரு காணித்துண்டுகள்.

குறிப்பிட்ட காணித்துண்டுகள் பின்வருமாறு சூழப்பட்டுள்ளது :-

***காணித்துண்டு இல. "A" - விஸ்தீரணம் - 1.2072 ஹெக்டேயார்.***

வடக்கு : றோயல் கார்டன் வீதி, காணித்துண்டு இல. "B" மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை ;
கிழக்கு : ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை மற்றும் கொலனாவை நீரோடை ;
தெற்கு : கொலனாவை நீரோடை மற்றும் சாந்திடப்பட்ட கான் ;
மேற்கு : சாந்திடப்பட்ட கான், றோயல் கார்டன் வீதி மற்றும் காணித்துண்டு இல. "B".

***காணித்துண்டு இல. "B" - விஸ்தீரணம் - 0.0959 ஹெக்டேயார்.***

வடக்கு : றோயல் கார்டன் வீதி மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை ;
கிழக்கு : ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை மற்றும் காணித்துண்டு இல. "A";
தெற்கு : காணித்துண்டு இல. "A" ;
மேற்கு : காணித்துண்டு இல. "A" மற்றும் றோயல் கார்டன் வீதி.

*3- 632*